www.padippakam.com

Search search...

முகப்பு அறிக்கைகள் தொடர்புகளுக்கு நிகழ்வுகள்

விடுதலைப் புலிகள்

முகப்பு
அறிக்கைகள்
தொடர்புகளுக்கு
நிகழ்வுகள்

பத்திரிகை

1982-1990
1991-2000
2001-2010

மாவீரர்கள்



# செல்வராசா பத்மநாதன் கைது தொடர்பாக செயற்குழு வெளியிட்ட கண்டன அறிக்கை (தமிழ்)

Wednesday, 02 December 2009 00:00 administrator

தலைமைச் செயலகம்,

தமிழீழ விடுதலைப் புலிகள்.

09–08–2009

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் அனைத்துலக உறவுகளுக்கான செயலகத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவரும், எமது விடுதலைப் போராட்டத்துக்கான அடுத்தகட்ட அரசியல் இராஜதந்திர நகர்வுகளுக்குப் பொறுப்பாக இருந்தவருமான திரு.செல்வராசா பத்மநாதன் அவர்களை சிறிலங்கா அரசாங்கம் கடந்த 05.08.2009 அன்று மலேசியாவில் இருந்து பலவந்தமாகக் கடத்திச் சென்றுள்ளமையானது உலகத் தமிழ்மக்கள் அனைவரையும்; பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இறுதிப்போர் என்ற பெயரில் ஈழத்தமிழ் மக்கள்மேல் சிறிலங்கா அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட இனப்படுகொலையின் உச்சக்கட்டமாக இவ்வருடம் மேமாதப் பகுதியில் வன்னியில் இருந்த ஒட்டுமொத்தத் தமிழர்களையும் கொன்றொழிக்கும் நோக்கோடு தாக்குதலைத் தீவிரப்படுத்தியபோது அம்மக்களைக் காக்கும் பொருட்டு எமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்திருந்தோம்.

இதனை நாம் சரிவரக் கடைப்பிடித்து வருகிறோமென்பதை சர்வதேச சமூகம் நன்கறியும். தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான நியாயமான அரசியல் உரிமைகளை –வென்றெடுப்பதற்கான அடுத்த கட்டப் போராட்டத்தை அரசியல் - இராஜதந்திர வழிகளினூடாக முன்னகர்த்துவதற்கு பல நாடுகளிலிருந்து வரவேற்பும் சாதகமான சமிக்கைகளும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் திரு.செல்வராசா பத்மநாதன் அவர்கள் நயவஞ்சகமான முறையில் கடத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டிருப்பது எம்மையும் எமது மக்களையும் ஆழ்ந்த துயரத்துக்குள்ளாக்கியுள்ளது. ஏறக்குறைய மூன்றரை இலட்சத்துக்கும் மேலான எமது மக்களும் போராளிகளும் உலக நியதிகளுக்கு மாறாக சிறையிலடைக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை தினமும் அனுபவித்துக் கொண்டிருப்பதை உலகம் நன்கு அறியும்.

அவர்களை மீட்டெடுப்பதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு அதற்குரிய பேச்சுவார்த்தைகளில் பலதரப்பினருடனும் திரு. செல்வராசா பத்மநாதன் அவர்கள் ஈடுபட்டுகொண்டிருந்த நிலையில் இந்தக் கைது அரங்கேறியுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நாம்; அரசியல் இராஜதந்திர ரீதியில் விடுதலைக்கான எமது அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்ளும் தீர்மானத்திற்கு வந்த பின்னரும் எமது போராட்டத்தை நசுக்கி ஒடுக்கிவிடும் நோக்கில்; மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்புலிகளாகிய எமக்கும் தமிழ் மக்களுக்கும் கவலையையும் விசனத்தையும் தருகின்றன. இதுவரை காலமும் "பயங்கரவாதிகள்" என்ற சாயத்தைப் பூசி எமது மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டத்தை மிகப் பாரிய பின்னடைவுக்கு உள்ளாக்கியிருந்தது சிறிலங்கா அரசு. ஆனால், தற்போது - நாம் எமது ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்தி வைத்திருக்கும் புதிய சூழலில் – நாம் எடுத்துவரும் அரசியல் முன்னகர்வுகளுக்கு உலகம் உறுதுணையாக இருக்கும் என்று எமது மக்களும் நாமும் நம்பியிருந்தோம்.

திரு செல்வராசா பத்மநாதன் அவர்களின் கைது தொடர்பில் அனைத்துலக மனிதாபிமான அணுகுமுறையும், பக்கசார்பற்ற விசாரணைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென தொடர்புடையோரை வேண்டிக் கொள்கின்றோம். திரு செல்வராசா பத்மநாதன் அவர்களின் பாதுகாப்பிற்கான முழுப் பொறுப்பையும் உத்தரவாதத்தையும் கவனத்தில் கொள்ளுமாறு அனைத்துலக சமூகத்திடம்; கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் இழப்புக்களையும் பின்னடைவுகளையும் கண்டு துவண்டு விடப்போவதில்லை. எவ்வித அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது எமது மக்களின் பேராதரவுடன் எமது இலட்சியப் பாதையில் தொடர்ந்து பயணிப்போம்.

நன்றி.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

ராம்.

செயற்குழு சார்பாக,

தலைமைச் செயலகம்,

தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழீழத் தேசியத்

தலைவர்

## தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து



உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும் இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது போராட்டம் ஒரு உந்துசக்தியாக, ஒரு முன்னுதாரணமாக, ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

Mobile Version Top

படிப்பகம்